**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.68** **நாள் : 03.04.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த தகவல் கையேட்டினை வெளியிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் அடையாள அட்டைகளை வழங்கினார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (03.04.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த தகவல் கையேட்டினை வெளியிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் அடையாள அட்டைகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்து அதன் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடைந்திட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் கையேடு வெளியிடப்பட்டது. இந்த கையேடு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மாவட்டத்தில் அனைத்து இடங்களில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் (NMR), சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள் (NULM Conservancy Workers), வெளிநிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களில் (Outsourcing Conservancy Workers) 17,659 தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய அடையாள அட்டைகள் வழங்குவதன் அடையாளமாக, முதற்கட்டமாக 300 பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய முதன்மைச் செயல் அலுவலர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., (ஓய்வு), வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தாட்கோ பொது மேலாளர் திரு.ந.சீனிவாசன், மேலாளர் திருமதி இந்திரா, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், உறுப்பினர்கள் திரு. சி. சீனிவாசன், திரு. ஜி. கே. ராஜன் (எ) கோவிந்தராஜன், திரு.அரிஷ் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூய்மைப் பணியாளர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டினை கருத்தில் கொண்டு, மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த வாரியத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் 2008ஆம் ஆண்டு முதல் வழங்கிட வழிவகை செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலன் கருதி அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை மற்ற நல வாரியங்களில் வழங்கப்படுகின்ற உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி உத்தரவிட்டு அதன்படி நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3959 பேர் நிரந்தர தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் தவிர்த்து 420 தினக்கூலி தூய்மைப் பணியாளர்கள் (NMR) 4990 சுய உதவிக்குழு பணியாளர்கள், தனியார் நிறுவனமான ராம்கி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் 2603 பேர் மற்றும் உர்பேசர் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் 9646 பேர் என மொத்தம் 17,659 தூய்மைப் பணியாளர்கள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் திட்டங்களால் பயனடைவார்கள்.

விபத்து காப்பீட்டு திட்டத்தின் வாயிலாக, விபத்தில் மரணமடைவோருக்கு, தலா ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம்), உறுப்புகளை இழந்தால் காயங்கள் ஏற்பட்டு

இயலாமையில் உள்ளோருக்கு ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) மற்றும் இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000/-, ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5,000/- முதியோர் ஓய்வூதியம் (தலா ரூ.1,000/-) திருமண உதவித்தொகை (தொழிலாளர் மகன்/மகள்) பெண்களுக்கு ரூ.5,000/- ஆண்களுக்கு ரூ.3,000/- என்ற அளவில் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி உதவித் தொகை என்ற முறையில் 10, 11, 12 ஆம் வகுப்பு பயிலும் பெண்களுக்கும், அதே வகுப்புகள் படித்து முடித்த இருபாலருக்கும், முறையான பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழில்நுட்ப பாலிடெக்னிக் படிப்பு, ஐ.டி.ஐ படிப்பு போன்றவற்றிற்கும் இப்படிப்புகள் விடுதியில் தங்கி படிப்போருக்கும் பல்வேறு வழிகளில் உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் பெண்களுக்கு மகப்பேறு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், முறையான மற்றும் முறைசாரா கழிவுநீர் சார்ந்த பணிகளில் நேரடியாக ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்கு (Core Sanitation Workers) சமூக கழிப்பிடங்கள் (CT) மற்றும் பொது கழிப்பிடங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் (PT), மழைநீர் வடிகால் சுத்தம் செய்பவர்கள் கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்பவர்கள், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (Feacal Sludge Trealement Plant (FSTP)) / Sewage Treatment Plant (STP) பணிபுரிபவர்களுக்கு தாட்கோ மூலம் தொழில் திறன் பயிற்சி, தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்ட (SWDS) அடையாள அட்டை & திறன் சரிப்பார்ப்பு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் குறைந்தபட்ச ஊதியம் ஊறுதி செய்தல், சமூகப் பாதுகாப்பு தொடர்பு & வாழ்வாதார ஆதரவுத் திட்டங்கள் போன்ற சிறப்பு சலுகைகள் கூடுதலாக தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக, தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்ட சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் (TNCWWB) சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 17,659 முக்கிய தூய்மைப் பணியாளர்கள் (CSWs) அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில், 8765 CSW தகவல்கள் TNCWWB போர்ட்டலில் பதிவு

செய்யப்பட்டுள்ளன, மேலும் *8493* விண்ணப்பங்கள் *TAHDCO* ஆல் அங்கீகரிக்கப்பட்டு அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. மீதமுள்ள நபர்களுக்கும் தகவல் பதிவு செய்து உறுப்பினர்களாக சேர்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**